ஓம்

ஆழ்வார்கள்

அருளிச்செய்துள்ள

நாலாயிரம்

பாட்டும் உரையும்

பதிப்பாசிரியர்

பாவநாசம் செங்கோல்ஜயன் பெருமாள் முதலியார் மரபினர்

திருவாளர் கி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள்,

தலைவர், தமிழ்ப்பேரவை, பாவநாசம்.

உரையாசிரியர்

வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார்

முதற்பதிப்பு

அமிழ்தமனை வெளியீடு - க

கலியூழி—ருதூருயக—விக்ருதி—வைகாசி—யஎ

உரிமை உரையாசிரியருக்கே

உள்ளுறை

பக்கம்

க. பெயர் ... ... க
உ. உள்ளுறை ... ... உ
௩. பதிப்புரை ௩
௪. முகவுரை ௪
௫. ஆழ்வார்கள் வரலாறு ... ...
௬. உரையாசிரியர் வரலாறு ... ...
எ. நாலாயிரம் அடைவும் தொகையும் ...
அ. நாலாயிரம் பாட்டும் உரையும் ...
௯. பாட்டு முதற்குறிப்பு அகராதி... ...
௰. அருஞ்சொல் முதலியவற்றின் அகராதி ...

பதிப்புரை

அடியேன் எனது தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கும், எனது தாய்நாடாகிய இந்தியாவுக்கும், எனது சமயமாகிய திருநெறிக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்கு இணங்கவும், நாலாயிரத்தின் பழைய உரைநயங்களைத் தமிழர் எல்லாரும் தெரிந்து பயனடைதற்காக என் தம்பி திருவாளன் வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியாரைக்கொண்டு அப்பழைய உரைகளைத் தமிழ் மரபுக்குத்தக்கபடி அமைத்து வெளியிடவேண்டும் என்று அவனுடைய ஆசிரியர் திருவாளர் சீகாழி வித்துவசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள் என்னிடம் வற்புறுத்திக் கூறியதற்கு இணங்கவும் "நாலாயிரம் பாட்டும் உரையும்" என்னும் இந்நூலை வெளியிடும் இப்பணியைத் தொடங்கியுள்ளேன். பத்துப்பாடல்கள் கொண்ட சிறுசிறு பகுதிகளாக இந்நூலை வெளியிட எண்ணியுள்ளேன். ஆகையால் இப்பதிப்பைக் கண்ணுறும் அறிஞர்களும், பெரியார்களும், அன்பர்களும் இவ்வெளியீட்டின் பகுதிகளை மிகுதியான அளவில் வாங்குவதனாலும், தங்கள் நண்பர்களை வாங்கச்செய்வதனாலும், தங்களுக்குத் தொடர்புடைய நூல்நிலையங்கள், கழகங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் முதலியவற்றில் வாங்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்வதனாலும் அடியேனது இந்நன்முயற்சி முற்றுப்பெறுதற்குத் துணைபுரியுமாறு வேண்டிக்கொள்கிறேன். இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய கிருஷ்ணா அச்சகத்தார்க்கு எனது நன்றி உரித்து. ஒன்றுக்கும் பற்றாத என்னை இப்பணியைத் தொடங்குமாறு அருள்புரிந்த கண்ணன் இப்பணி முற்றுப்பெறுதற்கும் அருள்புரியுமாறு அவன் திருவடிகளை வணங்குகின்றேன்.

அன்பன்,

17. செட்டிதெரு,
மதுராந்தகம்,
விக்ருதி, வைகாசி, ௩௭

கி. கல்யாணசுந்தர முதலியார்,
தலைவர், தமிழ்ப்பேரவை, பாவநாசம்.

முகவுரை

நாலாயிரம் என்பது ஒரு தமிழ்நூல். இது திருமாலடியவர்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவரால் இயற்றப் பெற்றது. இது இருபத்துமூன்று நூல்களால் ஆக்கப் பெற்றது. இது நாலாயிரம் திருப்பாட்டுக்களைக் கொண்டுள்ளது. இது ஒரு தொகைநூல். இதனைத் தொகுத்தவர் நாதமுனிகள். இது சொற்சுவை பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குவது. இது பழைய உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டப்படும் அளவைநூல்களில் ஒன்று. இதற்குத் தென்மொழியும் வடமொழியும் நிலைகண்டுணர்ந்த முன்னோர் பலர் மணிப்பிரவாள நடையில் பலதிறப்பட உரைவகுத்துள்ளனர். தமிழும் ஆரியமும் வல்ல அறிஞர்பெருமக்கள்மட்டுமே அவ்வுரைநயங்களை நுனித்து உணர்ந்து சுவைத்து இன்புற முடியும்.

ஆழ்வார்களின் அருளிச்செயல்களைத் தமிழர் அனைவரும் நன்கு உணர்ந்து பயன்பெறவேண்டும் என்னும் விருப்பத்தால், பாவநாசம் செங்கோல்ஐயன் பெருமாள் முதலியார் மரபினரும் பாவநாசம் தமிழ்ப் பேரவைத் தலைவராக வீற்றிருக்கின்றவருமாகிய என் அண்ணன் திருவாளர் கி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் கட்டளைக்கும், என் ஆசிரியர் திருவாளர் சீகாழி வித்துவசிகாமணி ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்கள் கட்டளைக்கும் இணங்க இந்நூலுக்கு மேலோர் வகுத்தருளிய மேற்குறித்த உரைகளை ஆசாகக்கொண்டு பிற தமிழ்நூல்களையும் உரைகளையும் துணையாகத் தழுவித் தமிழில் உரை எழுதியுள்ளேன். இவ்வுரை வெளிவருதல் திருமாமகள்கேள்வன் திருவுள்ளத்துக்கு உகப்பு ஆனால் அடியேனைக் கருவியாகக்கொண்டு திருநெறிச்செல்வர்கள் முகமாக இச்செயலை முற்றுப்பெறச்செய்துகொள்வான் என்னும் துணிவேபற்றி இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். நாலாயிரத்தைப் பிறப்புமுறைபற்றி அடைவு செய்திருக்கிறேன்.

அடியேனை இந்நன்முயற்சியில் புகுத்தி நடத்திப் பாதுகாத்தருளும் கண்ணனை என் மனமொழிமெய்களால் வாழ்த்தி வணங்கி இறைஞ்சுகின்றேன்.

கலியூழி ௫௲௫௰௧ }
விக்ருதி, வைகாசி, ௰௭ }

அன்பன்,
கி. சாமிக்கண்ணு.

ஓம்

நாலாயிரம்

முதலாவது

வையந்தகழி

(க.) வையந் தகழியா
வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன்
விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே
சூட்டினேன்சொன் மாலை
யிடராழி நீங்குகவே யென்று.

என்பது பாட்டு. (க)

உரைப்பாயிரம் :— நூல் உரைக்குமிடத்து நூற் பெயரும், ஆசிரியர் பெயரும், வழியும், எல்லையும், யாப்பும், நுதலிய பொருளும், கேட்போரும், பயனும், காலமும், களனும், காரணமும், அளவும் உரைத்து உரைக்கற் பாற்று.

அற்றேல், இந்நூல் என்ன பெயர்த்தோ எனின், நாலாயிரம் என்னும் பெயர்த்து. இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோ எனின், அருந்தவத்துப் பெருந் தன்மையுடைய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், காரிமாறன் சடகோபன், மதுரகவி, குலசேகரன், விட்டுசித்தன், கோதை, தொண்டரடிப்பொடி, திருப்பாணாழ்வார், கலியன் என்னும் ஆசிரியர் பன்னிருவரால் செய்யப்பட்டது. இந்நூல் எந்நூல் வழித்தோ எனின், முந்துநூல்கள் பலவும் ஆராய்ந்து அகக்கண்ணால் திருமாலைக்கண்டு அவனுடன் திளைத்த இன்பப்பேற்றுநுகர்ச்சி உள்ளடங்கப் பெருமை

யால் ஆழ்வார்கள் பன்னிருவரும் செந்தமிழில் அருளிச் செய்த பாமாலைகளின் தொகுப்பு இந்நாலாயிரம் ஆகை யால் இதுவே முதல் நூல். இந்நூல் வழங்கும் எல்லை யாதோ எனின், வடக்கே திருவேங்கடம் என்னும் மலை யையும், தெற்கே குமரிமுனையையும், கிழக்கே தொடு கடலையும், மேற்கே தொன்முதுபௌவத்தையும் நான் கெல்லைகளாகவுடைய தமிழகம் முழுமையும்ஆம். இந் நூல் எவ்யாப்பிற்றோ எனின், வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வெண்டுறை ஆசிரியத்துறை ஆசிரியவிருத்தம் கலித்தாழிசை கலித்துறை கலிவிருத்தம் வஞ்சித்துறை வஞ்சிவிருத்தம் என்னும் பாப்பாவினங்கள் யாப்பிற்று. இந்நூல் நுதலிய பொருள் யாதோ எனின், இறைநிலை உயிர்நிலை நெறி ஊழ்வினை வாழ்வு என்னும் ஐவகையுள் அமைந்துள்ள தமிழ் என்னும் செம்பொருள் ஆம். இந் நூல் கேட்டற்குரியார் யாவர் எனின், உலகில் மக்க ளாகப் பிறந்துள்ளார் அனைவரும் ஒருபடித்தாகப் பயின்று பயன்பெறற்கு உரியர். இந்நூலாற் பயன் யாதோ எனின், தமிழ் ஆராய்ந்து அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்களின் விழுப்பம் உணர்ந்து திருநெறியில் ஒழுகி இம்மைப்பேறு எல்லாம் முற்றப் பெற்றுப் பிறவிப்பெருங்கடல் நீந்தி அந்தமில்பேரின்பப் பெருவாழ்வாகிய வீடுபேறு அடைதல் ஆம். இந்நூல் இயற்றப்பெற்ற காலம் யாதோ எனின், நான்காவது ஊழியாகிய கலியூழியில் ஆழ்வார்கள் வாழ்ந்த காலமாகிய மூவாயிரத்துக்கும் நாலாயிரத்துக்கும் இடைப்பட்ட யாண்டுகள் ஆம். இந்நூல் அரங்கேற்றப்பெற்ற களன் யாதோ எனின், ஆழ்வார்கள் எம்பெருமானைக் கண்டு போற்றி அவன் திருவுள்ளத்துக்கு உகப்பான இந்நூலை அவன் திருமுன்பே அருளிச்செய்தனர். இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோ எனின், உலகினர் உய் யும் நோக்கத்தைக் கொண்ட அருள் காரணமாகவும்

பண்டையோருரைத்த தண்டமிழ்நூலிற் கொண்டிலாத குறியினேரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும் தொல்லைப்பினுவற்றுணிபொருளுணர்ந்த நல்லனேயோரை நகுவிப்பது காரணமாகவுஞ் செய்யப்பட்டது. இந்நூல் எவ்வளவைத்தோ எனின், நூல்வகையான் இருபத்துமூன்றும், பாட்டுவகையான் நாலாயிரமும் எனக் கொள்க.

இந்நூல், வையந்தகழி, அன்பேதகழி, திருக்கண்டேன், நான்முகன்திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம், திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி, கண்ணிநுண்சிறுத்தாம்பு, பெருமாள்திருமொழி, திருப்பல்லாண்டு, திருப்பாவை, தையொருதிங்கள், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனுதிபிரான், பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்னும் இருபத்துமூன்று தனி நூல்களின் தொகுதி ஆகும்.

இத்தொகைநூலில் இம்முதற்கண் நூல் என்ன பெயர்த்தோ எனின், வையந்தகழி என்னும் பெயர்த்து. இது வையந்தகழி என்றற்றொடக்கத்ததாதலின் முதற்குறிப்பால் பெற்ற பெயர். இதற்கு வழங்கும் மறுபெயர் முதற்றிருவந்தாதி என்பது. இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோ எனின், பொய்கையாழ்வார் என்பவரால் செய்யப்பட்டது. பகவானிடத்திலுண்டான ஈடுபாட்டாலே பொய்கையாழ்வாரை அமரரோபாதியாக நினைத்திருப்பர் ஆசிரியர். இப்படி நினைக்கைக்கு ஞாபகமேதென்ன, "இன்கவிபாடும் பரம கவிகள்" என்றும் "செந்தமிழ் பாடுவார்" என்றும் ஆழ்வார்கள் கொண்டாடுகையாலே என்க. இப்படிப்பட்டவர் காட்டிலே திரிவான் என் என்ன, பகவானிடத்திலீடுபடாதாரிருக்குமிடத்திற்காட்டில் நிலையியற்பொருள்களுள்ள காடே

அமையுமென்றிருப்பர். ஆனாலும் மக்களை விட்டுக் காட்டிலே போகக்கூடுமோ என்ன, "ஆன்விடை யேழன்றடர்த்தார்க்காளானாரல்லாதார் மானிடவரல்லரென்றென் மனத்தே வைத்தேனே" எம்பெருமான் திருவுள்ளம் ஊற்றமுறுத்தவளவிலும் அருளைப்பண்ணும் தம்முடைய மனத்திலும் கொடுமையை வைத்தேனென்கிறார். இனி அவர்கள் மக்கள் அல்லரென்று செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்ள வமையும். 'சிறந்தார்க்கெழுதுணையாம் செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன்" என்னும்படியே, அறிவு நடையாடாதவர்களிருக்குமிடத்தில் உறையுமதில் காட்டிலே இருக்க அமையுமென்று காடுகளிலே இருப்பர். இந்நூல் எந்நூல் வழித்தோ எனின், முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி முதல் நூலாகவே செய்யப்பட்டது. இந்நூல் வழங்கும் எல்லை யாதோ எனின், தமிழகம் முழுமையும் ஆம். இந்நூல் எவ்யாப்பிற்றோ எனின், அந்தாதித்தொடையில் அமைந்த நேரிசைவெண்பாயாப்பிற்று. இந்நூல் நுதலியபொருள் யாதோ எனின், அடியவர்கள் வாழ அருந்தமிழ் நுதலிற்று. இந்நூல் கேட்டற்குரியார் யாவர் எனின், மக்கள் அனைவரும் ஓதிச் சிறப்புறற்கு உரியார். இந்நூலாற் பயன் யாதோ எனின், பொய்கையாழ்வார்க்கு ஞானம் பிறந்தபடியைச் சொல்லிய முகமாக இந்நூலைக் கற்பாரும் ஞானம்பெற்று உய்வர் என்பதாம். இந்நூல் இயற்றப்பெற்ற காலம் யாதோ எனின், பாதிநாளிரவு ஆம். இந்நூல் அரங்கேற்றப்பெற்றகளன் யாதோ எனின், திருக்கோவலூர் என்னும் ஊரிலுள்ள இடைகழி என்னும் கோயிலில் முகில்வண்ணன் திருமுற்றம் ஆம். இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோ எனின், ஒரு மழையையும் காற்றையும் கண்டு திருக்கோவலூரிலே இடைகழியிலே ஒருத்தர் புக்குக்கிடக்க, இருவராவார் சென்று, "ஒருவர் கிடக்குமிடம் இருவர்க்குப் போதும்"

என்றிருக்க, மூவராவார் சென்று "இருவரிருக்குமிடம் மூவர்க்கு நிற்கப்போரும்" என்று மூவரும் நிற்க, ஒருவர் வந்து நெருக்க, நம்மையொழிய வேறே ஒருவர் நெருக்குகிறுருண்டென்று அவரைக் காண்டற்பொருட்டுப் . பொய்கையாழ்வார் ஞானத்தமிழ்விளக்கு ஏற்றினர். விளக்கு உண்டானாலும் ஞானமில்லையாகில் பொருள்களைப் பகுத்றியவொண்ணுதாகையால் ஞானவிளக்கு ஏற்றினர். இந்நூல் எவ்வளவைத்தோ எனின், நூறு பாட்டு உடைத்து.

இந்நூல், பாடாண்டிணையில் கடவுள் வாழ்த்து என்னும் துறையின்பாற்படும்.

இம்முதற்கண் நூலின் தலைக்கட்கிடந்த இம்முதற்பாட்டு என்னுதலிற்றே எனின், "தகழி" என்றும், "நெய்" என்றும் "விளக்கு" என்றும், புனைந்துரைக்கிறபடி எங்ஙனே யென்னில், நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின் உலகிற்கு முதல்வன் பொன்னணிநேமி வலங்கொண்டேந்திய கடவுள் என்கிறது ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வையம் தகழி ஆக வார் கடல்ஏ நெய் ஆக வெய்ய கதிரோன் விளக்குஆக செய்ய சுடர் ஆழியான் அடிக்குஏ இடர் ஆழி நீங்குகஏ என்று சொல்மாலை சூட்டினேன் என்று கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

(சொற்பொருள்) வையம்=நிலம், தகழியா=அகலாகவும், வார்=நெடிய, கடலே=கடலே, நெய்யாக=நெய்யாகவும், வெய்ய=வெம்மையையுடைய, கதிரோன்=பகலவன், விளக்கு ஆக=விளக்காகவும், (இப்படி வைத்து அநுமானத்தாலே எம்பெருமானை யறிந்து) செய்ய=சிவந்த, சுடர்=ஒளியையுடைத்தாகிய, ஆழியான்=ஆழிப்படையை யுடையனை எம்பெருமானுடைய, அடிக்கே=

அடிகளிலே, இடர் = துன்பமாகிற, ஆழி = கடல், நீங்குக வே = வற்றவேண்டும், என்று = என்று, சொல்மாலை = சொல்லினாற்றொடுத்த மாலையை, சூட்டினேன் = சேர்த்தினேன்.

(பொழிப்புரை) நிலவுலகமே தகழியாகவும் நெடிய கடலே நெய்யாகவும் வெம்மையையுடைய பகலவனே விளக்காகவும் சிவந்த நிறத்தை யுடைத்தாகிய ஆழியை யுடையானடிக்கே யென்னுடைய இடராகிய கடல் வறப்பதாக என்று சொற்றொடையைச் சேர்த்தினேன்.

(சிறப்புரை) நிலம் வலிது ஆகையாலே தகழியாக்கிற்று. காரணமுமாய்க் காரியமு மாகையாலே வையம் தகழி என்கிறது. பெரியவெள்ளத்திலே ஒரு கழல் மிதக்குமாபோலே, நிலம் நீரிலே நிற்கும்போது இதுக்கு ஓரடிவேண்டாவோ? வார்கடல் = சூழ்ந்த கடல்; நிறைந்த கடலென்னவுமாம். நீர்ப்பொருளாகையாலே நெய்யாகக் கொண்டது. யாற்றினாலே நீர் புகுந்ததென்று நிறையாதிருக்கையாலும், இல்லையென்று குறையாதிருக்கையாலும், நிலத்துக்கு உயர்ந்திருக்கச் செய்தே நிலத்தை அழிக்கமாட்டாமையாலும் காரியமென்று தோற்றுகையாலே நெய்யாகக் கொள்ளுகிறது. நிலத்தை அபிபவியாதே நிற்கும்போது ஓரடிவேண்டாவோ? வெய்ய கதிரோன் ஒளிப்பொருளாகையாலே விளக்காக் கொண்டது. முப்பது நாழிகையிலொரு நாழிகை குறையவு மேறவும் நிற்கப் போகாமையாலே, கடவுட்பணிவிடைக்காரனென்று தோற்றுகையாலே, விளக்கு என்று சொல்லிற்று; தன்னையும் காட்டிக் கடவுளையும் காண்பிக்கையாலே, வெய்யகதிரோன் என்று விளக்கினுடைய இடத்திலே சொல்லுகிறவனாகை வேண்டாவோ? இம்மூன்றும் ஐம்பூதங்களுக்கும் உபலட்சணம். இப்படிக்கு எல்லாவற்றுக்கும் அவன் ஆண்டான், எல்லாமும் அவனுக்குக் கார்யதயாசேடமென்றறிந்தால் அங்குத்

தைக்கு அசாதாரணபரிசர்யைபண்ணும்படி சொல்லு கிறதுமேல். செய்ய சுடராழியான்=செய்ய சுடரென்றது கரிய திருமேனிக்குப் பகைத்தொடையாயிருக்கை. இதுக்கு ஒரு நாதனுளன் என்றிருந்தால் அடிமை செய்ய வேண்டும். இத்தால் உருவம் முதலானவைகள் இல்லை. என்னும் வாதிகளைத் தவிர்க்கிறது. பிற படைகளையுடைய பிரமன், சிவன் முதலிய வேறுதெய்வங்களுக்கும் உலகத்தில் ஒருசார்தொடர்பு உண்டே என்னில், அத்தையும் விலக்குகிறது. அடிக்கே=பிராட்டியல்லரே, முறைதப்பாதபடி வேண்டுமே. வடிவுடைமையைச் சொல்லுகிறது. தம்முடைய அடிமை சொல்லுகிறது. சூட்டினேன் சொன்மாலை=" யதோவாசோ நிவர்த்தந்தே " என்கிற பொருளை மறுபாடுருவப் பேசிப் பண்டில்லாத அழகும் உண்டாக்கினேன். விரை மாறாத மாலையைச் சூட்டினேன். "சொற்றொடை" என்னுமாப் போலே. இடராழி நீங்குகவே யென்று=என்னை உளனுக்குகைக்காக; சொல்லாதிருக்கை இடர்; "இடரார் படுவார்" இத்யாதிவத். முக்குற்றத்தாலே தப்தரானவர்கள் இதைக்கற்றுத் தம் வழியே போந்து இடர்க் கடலைப் பிழைப்பார்களென்று. அன்றிக்கே, அவனைப் பேசப்பெறாத தம்முடைய இடர்போகவென்றுமாம். குணத்தை நினைக்கிலும் குனியளவாயிருக்கும் இவர்க்கு. மாறனேரிநம்பி எம்பெருமானை மறக்க விரகில்லையோ என்றாராம். உலகத்தின் இடர்தீருகை கருதியபொருள்.

ஒப்புமைப்பகுதி:—" அறந்தகளி யான்ற பொருடிரியின்பு, சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா, வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்க, ளுள்ளிருணீக்கும் விளக்கு"—(திருவள்ளுவமாலை—47).

இப்பாட்டு தொகைவிரியுருவகம் என்னும் அணிக்கு எடுத்துக்காட்டாகத் தண்டியலங்காரத்தின் பழையஉரையாசிரியரால் கொடுக்கப்பட்டுள்ளது.

வையம் என்பது உலகம் என்பதன் பரியாயமொழியாகிய மங்கலச்சொல். நூல்களின் முதலில் மங்கலச்சொற்களுள் உலகம் என்பதைத் தனித்தேனும் அடைமொழியுடன் சேர்த்தேனும் அமைத்தலும் அதன்பரியாய மொழிகளை அவ்வாறே அமைத்தலும் மரபு. அவற்றுட் சில வருமாறு:—"வையகம் பனிப்ப"—(நெடுநல்வாடை-அடி-1); "பார்மண்டலத்தினில்"-(ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி-1)-இவற்றில் உலக மென்பதன் பரியாய மொழிகள் தனித்து வந்தன. "மணிமலைப் பணைத்தோண் மாநிலமடந்தை"-(சிறுபாணாற்றுப்படை-அடி-1); "மாநிலஞ் சேவடியாக"-(நற்றிணை-கடவுள்வாழ்த்து); "கண்ணகன் ஞாலம்"-(திரிகடுகம்-1); "இருநிலமடந்தை" (திருவொற்றியூரொருபாவொருபஃது-1)-இங்கே பரியாய மொழிகள் அடையடுத்து வந்தன. "உலகமுவப்ப"-(திருமுருகாற்றுப்படை-அடி-1); "உலகந்திரியா"-(மணிமேகலை-1-1); "உலக மூன்றும்"-(வளையாபதி - கடவுள்வாழ்த்து); "உலகம் யாவையும்"-(இராமாவதாரம்-கடவுள்வாழ்த்து-1); "உலகெலாமுணர்ந்து"-(பெரியபுராணம்-கடவுள்வாழ்த்து-1)-இவற்றில் உலகமென்பது தனித்து வந்தது. "நனந்தலையுலகம்"-(முல்லைப்பாட்டு - அடி-1); "ஆர்கலியுலகத்து"-(முதுமொழிக்காஞ்சி-1-1); "மூவா முதலாவுலகம்"-(சீவகசிந்தாமணி-1); "அலையார்ந்த கடலுலகம்"-(ஆளுடையபிள்ளையார் கலம்பகம்-1); "மலர் தலையுலகத்து" - (நாற்கவிராசநம்பிஅகப்பொருள் - 1); "நீடாழியுலகத்து" - (வில்லிபுத்தூராழ்வார்பாரதம் - கடவுள்வாழ்த்து-1); "மலர் தலையுலகின்" - (நன்னூல் - சிறப்புப்பாயிரம்) - இவற்றில் உலகமென்பது அடையடுத்து வந்தது.

திருவாய்மொழி

பதினோராம்பத்து - வாயுந்திரை

(அ௨௧) வாயுந் திரையுகளுங்
கானன் மடநாரா
யாயு மமருலகுந்
துஞ்சிலுநீ துஞ்சாயா
னோயும் பயலைமையு
மீதூர வெம்மேபோ
னீயுந் திருமாலா
னெஞ்சங்கோட் பட்டாயே.

என்பது பாட்டு. (௱௰௧)

தோற்றுவாய்:—இப்பதினோராம்பத்து என்ன பெயர்த்தோ எனின் வாயுந்திரை என்னும் பெயர்த்து. இது முதற்குறிப்பால் பெற்ற பெயர்.

அஃதற்றாக, மேலைப்பத்தினோடு இப்பத்திற்கு இயைபு என்னையெனின், மேலைப்பத்திலே "மணியை வானவர் கண்ணனைத் தன்னதோரணியை" (திருவாய்மொழி-௱௰) என்று எளிமையையும், மேன்மையையும், வடிவழகையும் சொன்னார்; இவையோரொன்றே போருமிறே மேல்விழப்பண்ணுகைக்கு: இங்ஙனன்றிக்கே இவை மூன்றும் குறைவற்ற பொருளானால் நுகராதிருக்கப் போகாதிறே; "இப்பொருளை இப்போதே நுகரவேண்டும்" என்று மெய்யுறுபுணர்ச்சிவேட்கை பிறந்தது; அப்போதே நினைத்த பரிமாற்றம் பெறுமையாலே பிறந்த ஆற்றாமைமிகுதியை, எம்பெருமானோடே கலந்துபிரிந்து ஆற்றாமையாலே நோவுபடுகிறாளொருபிராட்டி, ஆற்றாமை கைகொடுக்க விளையாட்டுப்பொழிலிலே புறப்பட்டு,

அங்கே இருக்கிற பொருள்களைக் கண்டு, அவையுமெல்லாம் பகவானைப்பிரிந்து நோவுபடுகிறனவாகக்கொண்டு, அவற்றுக்குமாகத் தான் நோவுபடுகிற பாசுரத்தாலே பேசுகிறார்.

"அஞ்சிறையமடநாரை"யிலும் இதுக்கு ஆற்றாமை கரைபுரண்டிருக்கும். அதுக்கு அடியென்? என்னில்; "பெருநிலங்கடந்த நல்லடிப்போ தயர்ப்பிலனலற்றுவன்" (திருவாய்மொழி-௩௨) என்று பிறப்பிலே நுகரக்கோலிப் பெறாததாகையாலே, "அது ஒருகாலத்திலே, நாம் பிற்பாடராகை" என்று ஆறலாம்; இது அங்ஙனன்றிக்கே பிறப்பில் பிற்பாடர்க்கும் இழக்கவேண்டாதபடி முகங்கொடுக்கைக்கு நிற்கிற இடமிறே உகந்தருளினநிலங்கள்; "நம்பியைத் தென்குறுங்குடி நின்ற" (திருவாய்மொழி-௱அ) என்று உகந்தருளினநிலத்திலே நுகர ஆசைப்பட்டுப் பெறாமையாலே, வந்த ஆற்றாமையாகையாலே இது கனத்திருக்கும். ஆகையாலே அஞ்சிறையமடநாரையில் தூதுவிடுகைக்குப் பொறுமை உண்டாயிற்று; இதில் அங்குத் தூதுவிட்டவையும் நோவுபடுகிறனவாக அவற்றுக்குமாகத் தாம் நோவுபடுகிறார். நுகர்கிற இவர் தம்படியாலும் இப்பத்துக்கு ஆற்றாமை கனத்திருக்கும்: "பத்துடையடியவர்க்கு" முன்பு அப்பொருளை நுகர்ந்து பிரிந்த அளவாலுள்ள ஆற்றாமையிறே அதிலுள்ளது; அஞ்சிறையமடநாரைக்குப் பின்பு இவ்வளவும் வர அவனுடைய குணங்களை நுகர்ந்து பிரிந்த பிரிவாகையாலே ஆற்றாமை மிகவுங் கனத்திருக்கும் இதில்; ப்யிலப் பயிலவிறே இனிதாயிருப்பது இப்பொருள்.

நாரையாகில் வெளுத்திருக்கையும், அன்றிலாகில் வாயலகு நெகிழ்த்தவாறே கதறுகையும், கடலாகில் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி கூப்பிடுகையும், காற்றாகில் ஓரிடத்தும் நிலைபெற்று நிற்பதன்றாய்த்

திரிகையும், மேகமாகில் நீராய் இற்றிற்று விழுகையும், மதியாகில் தேய்வது வளருவதாகக்கடவதென்றும், இருளாகில் பொருளைக் காணவொட்டாதென்றும், கழியாகில் அலைவாய் முகமாய் ஏறுவது வடிவதாக்கிடவதென்றும், விளக்காகில் இற்றிற்று எரியக்கடவதென்றும்; இவற்றுக்கு இவை இயற்கைத்தன்மை யென்று அறியாதே இவையெல்லாம் தம்மைப்போலே பகவானைப் பிரிந்து நோவுபடுகிறனவாகக்கொண்டு, அவற்றுக்குமாகத் தாம் நோவுபட்டுச் சொல்கிறார்.

இப்பத்தால்-இளையபெருமாளிற்காட்டில் இவர்க்கு உண்டான தனிமை சொல்லுகிறது. எங்ஙனே யென்னில், மீனுக்கு நீர் பற்றுக்கோடாக அறுதியிட்டார் அவர்; இவர் அந்த மீனோடு நீரோடு தம்மோடு வாசியற பகவானது குணங்களே பற்றுக்கோடு என்று இருக்கிறார். ஆகையாலே துயரமுடையோராயிருப்பார் தங்களோடு ஒத்த துயரமுடையோரைக் கழுத்தைக் கட்டிக்கொண்டுகிடந்து கூப்பிட்டு ஆற்றாமைக்குப் போக்குவிட்டுப் பொறுக்குமா போலே, இவளும் கண்ணுக்குத் தெரிந்த பொருள்களெல்லாவற்றோடும் கழுத்தைக் கட்டிக்கொண்டுகிடந்து, "நீ பட்டதோ? நான் பட்டதோ?" என்று கூப்பிடுகிறாளாயிருக்கிறது. "ஆறுகளோடு சிறுகுழிகளோடு பெருங்குழிகளோடு வாசியறக் கரையருகுஞ் சென்று கிட்டவொண்ணாதபடி இராமனது பிரிவாலே கொதித்ததிறே;. சிறுகாட்டோடு பெருங்காட்டோடு வாசியறப் பிரிவுத்தீ கொளுத்திற்று" (வான்மீகிராமாயணம் அயோத்யாகாண்டம்) என்னுமாபோலே அறிவுடையன அறிவில்லன என்னும் பிரிவினையற நோவுபடுத்தவற்றையிறே இவள் பிரிந்த பொருள்தானிருப்பது. துயரமுடையோர் ஒத்ததுயரமுடையோரைக் கழுத்தைக் கட்டிக்கொண்டு கூப்பிட்ட இடமுண்டோ? என்னில்; பெரு

மாள் "ஏதேம்ருதஸ் தேஸ்வசுர: பித்ராஹீநோவஸி லக்ஷ்மண" (வான்மீகிராமாயணம் அயோத்யாகாண்டம்) என்று ஒருவரையொருவர் கட்டிக்கொண்டுகிடந்து கூப்பிட்டாற்போலே கூப்பிடுகிறாள் இங்கு.

இப்பத்து நெய்தற்றிணைக்கு உரியது. இது "அவரவருறுபிணிதமபோற் சேர்த்தியகிளவி" (தொல்காப்பியம் பொருளதிகாரம் சூத்திரம்-194) என்னும் துறையது; "தன்னுட்கையாறெய்திடுகிளவி" (இறையனாரகப்பொருள் சூத்திரம்-௩௰) என்றலும் ஆம். இது கலிவிருத்தம்; நாலடித்தாழிசையுமாம். இது புறநீர்மை என்னும் பண்ணினையும், இடையொத்து என்னும் தூக்கினையும் பெற்றது.

இப்பத்தின் தலைக்கட்கிடந்த பாட்டு என்னுதலிற்றோ எனின், பிரிந்தார் இரங்குவது நெய்தல்நிலத்திலே யாகையாலே, கடற்கரைச் சோலையைப்பற்ற இவள் பிரிவுக்கிரங்கியிருக்கச்செய்தே, அங்கே இரைதேர்ந்து அமர்ந்திருக்கிறதொரு நாரை கண்ணுக்குத் தெரிய, அதன் உடம்பில் வெளுப்பைக்கண்டு, அதுவுந் தன்னைப்போலே பிரிவாற்றாமையாலே வந்த பசப்போடே யிருக்கிறதாகக்கொண்டு, பாவியேன், நீயும் நான் அகப்பட்ட துறையிலே அகப்பட்டு நெஞ்சு பறியுண்டாயாகாதே யென்கிறாள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

வாயும் திரை உகளும் கானல் மடம் நாராய் ஆய்உம் அமரர் உலகுஉம் துஞ்சிலும் நீ துஞ்சாய் ஆல் நோய்உம் பயலைமைஉம் மீதூர எம்மேபோல் நீஉம் திருமாலால் நெஞ்சம் கோள்பட்டாய் ஏ என்று யாற்றுநீர்ப் பொருள்கோள்.

(இதன் பொருள்) வாயும் திரையுகளும்=பெரிய மலைபோலே வந்து கிட்டுகிற திரைகள் மேலே தாவிப்போகா

நின்றாலும் நினைத்தது கைப்புகுருமளவும் இடையாதே யிருக்குமாயிற்று. கண்ணனையே இடைவிடாது நினைத்திருக்கும் மேலோர். இருக்குமாபோலே யிருக்கும். அலை கடல் நீர் குழம்ப வகடாடவோடி யகல்வாஙின்றஞ்ச முதுகில் மலைகளை மீதுகொண்டு வருமீனை மறவாதிருப்பார்க்குப் போலியாயிராநின்றது, அலைகளை மீதுகொண்டு வருமீனை மறவாதிருக்கிற இதுவும். "இடையறாது மழைத்தாரைகள் விழாநிற்கச் செய்தேயும் மலைகள் இடையாதே நின்றன; என்போலே யென்றால், "எம்பெருமானே காவலன்" என்றிருப்பார் முக்குற்றங்களால் வந்த துன்பங்களுக்கு இடையாதே யிருக்குமாபோலே" என்று சொல்லக் கடவதிறே. வந்து இட்டுகிற திரை உகளாநின்றுள்ள கானலிலே=நெய்தல்நிலத்திலே யிருக்கிற மடநாராய்; வேள்விகளும் பண்ணிப் பவித்ரங்களும் முடிந்திட்டுத் "தார்மிகர்" என்னும்படி திரியாநிற்பர்களிறே பிறர்க்கின்ன செய்யாநிற்கச்செய்தே க்ராமணிகள்; அப்படியே சிறுமீன்கள் வந்தாலும் இகழ்ந்திருக்குமாயிற்று நினைத்தது கைப்புகுருமளவும். ஆயும்=என் பிறப்பேபிடித்து உறங்காத தாயும் உறங்கிலும். அமருலகுந்துஞ்சிலும்= தங்கள் சத்தையேபிடித்து உறங்காத அமரர்கள் உறங்கிலும் நீ உறங்குகிறிலை. இவளைப்பெற்ற தாய்க்கு உறக்கமின்றிக்கே யொழிவானென்? என்னில்; "முன்பெல்லாம் இவளுக்கு ஈடாயிருப்பானொருவனைப் பெற்றுக் கொடுத்தோமாக வல்லோமே" என்று கண்ணுறங்காது, பின்பு தலைவனைப் பிரிந்து இவள் நோவுபடுகிறபடியைக் கண்டு அத்தாலே கண்ணுறங்காது; "ஒரு கொழுகொம்பிலே கொண்டுபோய்ச்சேர்த்து நோக்கில் நோக்கலாய், இல்லையாகில் கிடையாதபடியான பருவமாய் இராநின்றது, இவளுக்கீடாயிருப்பானொருவனைப்பெற்று அவன் கையில் காட்டிக்கொடுத்தோமாக வல்லோமே" என்று எங்களையர் சிந்தார்ணவகதரானரென்றருளிறே பிராட்டி; அப்படியே

யிறே இவளைப் பெற்ற தாயாரும் கண்ணுறங்காதே படும் படி. இமையவராய் எப்போதும் காண்கிறவர்களாகை யாலே, அமரர்களுக்குந்தானே உறக்கம் இல்லையே. நோயும் பயலைமையும்=காமநோயும் அத்தாலே வந்த பசப்பும் தன்பக்கலிலே காண்கையாலே அவ்விரண்டும் அதுக்கு உண்டென்றிருக்கிறாள். மீதூர=நஞ்சேறினாற் போலே உடம்பிலே பரக்க. எம்மேபோல்=இப்படி வருத்தப்படுகைக்கு நாளொருத்தியு மென்றிருந்தேன்: நீயும் என்னைப்போலே யாவதே? துக்கபரிபவங்களைப் பொறுத்திருக்கையாலும், பற்றிற்று விடாதிருக்கிறபடி யாலும், பசப்பாலும் என்னைப்போலே யிரா நின்றாய். நீயும்=பிரிவுத்துயரம் பொறுக்கமாட்டாத மென்மையை யுடைய நீயும்; "தத்தஸ்ய சத்ருசம்பவேத்" என்றிருக்க மாட்டாமைக்கு இருவரும் ஒத்தோமோ? திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயே=காமநோயும் பசப்பும் இருந்த படி கண்டேனுக்கு, நீயும் நான் அகப்பட்ட துறையிலே அகப்பட்டாயாகாதே. மைந்தனை மலராள்மணவாளனை யோ நீயும் ஆசைப்பட்டது? நெஞ்சங்கோட்பட்டாயே= நெஞ்சு பறியுண்டாயாகாதே; தோற்புரையன்றியே, மறு பாடுருவ வேர்ப்பற்றிலே நோவுபட்டாயாகாதே (என்ற வாறு).

வாய்கை=கிட்டுகை. கானல் என்பது நெய்தல்நிலத் திற்கும் கடற்கரைச்சோலைக்கும் பெயர். பற்றிற்றுவிடா தொழிகையிறே மடப்பமாவது. நெஞ்சு எல்லாவற்றுக் குங் காரணமாகையாலே வேர்ப்பற்று எனப்பட்டது.

அமரர் என்பது அமர் எனக் கடையிடத்துக் குறைந்து நின்றது. கோட்பட்டாயே என்பதில் ஏகாரம் வினாவின்கண் வந்தது.

"வாயுந்திரையுகளுங் கானல் மடநாராய்" என்னும் அடியோடு, "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்,

குத்தொக்க சீர்த்த விடத்து" என்னும் திருக்குறளும் (490), "மீன்கோடற்கிருக்கும்வழி அது வந்தெய்துந் துணையும் முன்னறிந்து தப்பாமற்பொருட்டு உயிரில்லது போன்றிருக்கு மாகலானும், எய்தியவழிப் பிறப்பு வதற்கு முன்பே விரைந்து குத்துமாகலானும், இருப்பிற் குஞ் செயலிற்குங் கொக்கு உவமை யாயிற்று" என்று அதற்குப் பரிமேலழகர் கூறும் சிறப்புரையும், "மடைத் தலையில் ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்கு மாங் கொக்கு" என்னும் மூதுரைப்பாட்டின் (16) அடி களும் ஒத்திட்டுக் காணத்தக்கன. (க)

(அ௨௨) கோட்பட்ட சிந்தையையாய்க்
கூர்வாய வன்றிலே
சேட்பட்ட யாமங்கள்
சேரா திரங்குதியா
லாட்பட்ட வெம்மேபோ
னீயு மரவணையான்
றாட்பட்ட தண்டுழாய்த்
தாமங்கா முற்றாயே.

என்பது பாட்டு. (௱௰௨)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், இப்படி நாரை யைப்பார்த்து வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே, அருகே நின்ற பனையிலே தங்கின அன்றிலானது வாயலகு நெகிழ்த்தவாறே கூப்பிட்டது; அதனுடைய இரக்கக் குரலைக் கேட்டுப், "பாவியேன், நீயும் என்னைப்போலே அகப்பட்டாயாகாதே" என்கிறாள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

கோள்பட்ட சிந்தையை ஆய் கூர்வாய அன்றிலே சேண்பட்ட யாமங்கள் சேராது இரங்குதி ஆல் ஆள்பட்ட எம்மேபோல் நீஉம் அரவுஅணையான் தாள்பட்ட தண்மை துழாய் தாமம் காமுற்றாய் ஏ என்று யாற்றுநீர்ப் பொருள்கோள்.

(இதன் பொருள்) கோட்பட்ட சிந்தையையாய் = பறியுண்ட மனத்தை யுடையையாய்; "பறியுண்டமனம்" என்று அறிந்தபடி என்? என்னில்; அதனுடைய அடியற்ற குரல்தான் "நெஞ்சிழந்தது". என்று தோற்ற நின்றதுகாணும் இவளுக்கு. கூர்வாய அன்றிலே = தனியராயிருப்பாரை இருதுண்டமாக இடவல்ல குரலாயிற்று. கூர்வாய - வாய் என்று வார்த்தை; அன்றியே கூர்த்த வாயலகையுடைய என்னுதல். சேட்பட்ட யாமங்கள் = இரவாய் நெடுகுகை யன்றிக்கே, யாமங்கள்தோறும் நெடுகாநின்றதாயிற்று. சேராதிரங்குதியால் = நெடுகுகிற யாமங்களில் படுக்கையிற் சேராதொழிந்தாலும் பொறுக்கலாமிறே. அங்ஙனே செய்யாதே இரங்குமவளாகாநின்றாய். ஆள்பட்ட எம்மேபோல் = நெஞ்சு பறியுண்டு படுக்கையிலுஞ் சேராதே நோவுபடுகைக்கு என்னைப் போலே நீயும் அவன் திருவடிகளில் அடிமைச்சுவட்டிலே யாகாதே அகப்பட்டது. நீயும் = நாட்டாரில் தனிப்படப் போந்திருக்கிற நீயும். "பதிம் விஸ்வஸ்ய", "யஸ்யாஸ்மி" என்று ஓதினையல்லை. மயர்வற மதிநலம் பெற்றாயில்லை; என்தனை உட்புகாத நீயும் இப்படியாவதே. அரவணையான் தாட்பட்ட தண்டுழாய்த்தாமம் காமுற்றாயே = "திருமாலால்" என்றதிறே மேலே, இருவருமானால் இருப்பது படுக்கையிலேயாயிருக்குமே; "அவனும் அவளுமாய்த் துகைத்த திருத்துழாய்மாலை பெறவேண்டும் என்று அத்தையோ நீயும் ஆசைப்பட்டது? தாட்பட்ட தண்டுழாய்த்தாமம் = சூடர்முடிமேல் துழாயொழிய, அவர்களிருவருங் கூடத்துகைத்த துழாயையோ நீயும் ஆசைப்பட்டது? புழுகிலே தோய்த்தெடுத்தாற்போலே விரையிலே தெரியுமே, கலம்பகன் நாறுமே. "தாளிணை மேலணி தண்ணந்துழாய்" (திருவாய்மொழி-348) என்றிறே தான்கிடப்பது. காமுற்றாயே = சங்கத்தளவிலே நின்றிலையாகாதே, பெறில் வாழ்தல், பெறுவிடில் முடிதலான நிலைமையை எய்தினையாகாதே (என்றவாறு).

தாமம்=ஒளியும், மாலையும். தனியராயிருப்பார் = தலைவனைப் பிரிந்திருப்பார். சேண்=நெடுமை. படுகை= உடைத்தாகை. காமுற்றாயே=ஆசைப்பட்டாயோ.

காமுற்றாயே என்பதில் ஏகாரம் வினாவின்கண் வந்தது.

இப்பாட்டோடு, "மன்றிரும் பெண்ணை மடல்சே ரன்றி, னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய, வென்றுய ரறிந்தனை நரறியோ வெம்போல, வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ" என்னும் கலித்தொகைப் பாட்டின் அடிகள் (129: 12-15) ஒத்திட்டுக் காணத்தக்கன. (௨)

(அ௨௩) காமுற்ற கையறவோ டெல்லே
யிராப்பகல்
நீமுற்றக் கண்டுயிலாய் நெஞ்சுருகி
யேங்குதியாற்
றீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான்
றாணயந்த
யாமுற்ற துற்றாயோ வாழி
கனைகடலே.

என்பது பாட்டு. (௱௰௩)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், அன்றிலினுடைய குரலுக்கு இடைந்திருக்கிறவளவிலே கடலென்றொரு பெரும்பொருளாய், அது தன் காம்பீர்யமெல்லாம் இழந்து கரையிலே வருவது கரையேறமாட்டாதே உள்ளே விழுவதாய், எழுத்துஞ் சொல்லும் பொருளுந் தெரியாதபடி ஊமைக்கூறனைக் கூப்பிடுவதாகிறபடியைக் கண்டு, "பாவியேன், நீயும் ராமகுணத்தில் அகப்பட்டு நான் பட்டது பட்டாயாகாதே" என்கிறாள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

எல்லே கனைகடலே காமுற்ற கையறவோடு இராப் பகல் நீ முற்ற கண் துயிலாய் நெஞ்சு உருகி ஏங்குதி ஆல் தீ முற்றத் தென் இலங்கை ஊட்டினான் தாள் நயந்த யாம் உற்றதே உற்றாய் ஓ வாழி என்று கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

(இதன் பொருள்) எல்லே = இரவோடு பகலோடு வாசி யறக் கதறுகிறபடியைக் கண்டு, தன்படிக்குப் போலியாயிருக்கையாலே தோழியை விளிக்குமாபோலே விளிக்கிறாள் சிறையுறவுபோலே; "ஓதமுநானுமுறங்காதிருந்தேனே'. (பெரியதிருமொழி—அ௩-௬) என்னக்கடவதிறே. அன்றிக்கே, எல்லே என்றது என்னே என்று ஆச்சர்யமாதல்' கனைகடலே = வாய்விட்டுக்கூப்பிடமாட்டாதே, விம்மல் பொருமலாய்ப் படுகிறாயாகாதே. இரைகிற கடலே யென்னவுமாம். காமுற்ற கையறவோடு = ஆசைப்பட்ட பொருளிழவோடே. கைத்து என்றது பொருள். ஆசைப்பட்ட பொருள் கைபுகுராமையால் வந்த இழவோடே. காமுறுகையும் இழவும் கடலுக்கின்றிக்கேயிருக்க, எடுத்துக்காட்டாகவுள்ளவளான தனக்கு உண்டாகையாலே, "அதற்கும் உண்டு" என்று அநுமித்துச் சொல்லுகிறாள். இராப்பகல் நீ முற்றக் கண் துயிலாய் = உறங்கக்கண்ட இரவுக்கும், உறங்காமைக்குக்கண்ட பகலுக்கும் உன்பக்கல் ஒரு வாசி கண்டிலோமீ. நீ = உன் காம்பீர்யமெல்லாம் எங்கேபோயிற்று. நெஞ்சுருகி ஏங்குதியால் = உறக்கமின்றிக்கே யொழிந்தால் நெஞ்சுதான் அழியாதிருக்கப் பெற்றதோ? (பேற்றுக்கேற்ற) நெஞ்சழிந்து கூப்பிடாநின்றாய். தீ முற்ற தென்னிலங்கை ஊட்டினான் = பாவியேன், மேன்மையிலே ஆசைப்படமாட்டிற்றில்லையாகாதே, காதலிபிரிவு பொறுக்கமாட்டாத சக்கரவர்த்தித்திருமகனையாகாதே நீயும் ஆசைப்பட்டது. தென்னிலங்கை முற்றத் தீயூட்டினான். விபீடணன் இல்லம் இலங்கைக்குள் அன்றுபோலே. அவன் அவர்களுக்குக் கூட்டில்லாதாப்

போலே, அவனகமும் அவர்களகத்துக்குக் கூட்டில்லை காணும்; அவனகம் அடியவன் இல்லமிறே. அன்றிக்கே; தீ முற்றத் தென்னிலங்கை யூட்டினான் = இராவணபயத்தாலே முன்பு அரை வயிறாக வாழ்ந்த தீ, "ஒள்ளெரி மண்டியுண்ண" [பெரியதிருமொழி—கூஅக] என்கிறபடியே வயிறுநிறைய உண்டு வாழப்பெற்றதாயிற்று. பெருமாளை அண்டைகொண்ட பலத்தாலே; "செந்தீயுண்டு தேக்கிட்டதே" (இராமாவதாரம் — சுந்தரகாண்டம் — இலங்கையெரியூட்டுபடலம்—46.) என்னக்கடவதிறே. தாள் நயந்த யாம் உற்றது உற்றாயோ = கழிகாதலனான சக்கரவர்த்தித் திருமகன் திருவடிகளை ஆசைப்பட்ட நான்பட்டது பட்டாயாகாதே நீயும். தாள் நயந்தாரோடு தோள் நயந்தாரோடு வாசியறுவதே வருத்தப்படுகைக்கு; பிராட்டியோடு பரதாழ்வானோடு வாசியற்றதிறே. வாழி = இவ்வாற்றாமை நீங்கி நீ வாழ்ந்திடுக (என்றவாறு).

காமுற்ற = ஆசைப்பட்ட. கை = பொருள்.

அறவு = இழவு. சிறையுறவு = சிறைக்கூடத்திலே சேர இருக்கையால் வந்த உறவு.

கைத்து என்பது கை எனக் குறைந்துநின்றது. எல்லே என்பதும் ஏடி என்பதும் தோழியை விளிக்கும் முன்னிலைப்பெயர்கள். துயிலாய் என்பது நீ தூங்குகிறாயில்லை எனப் பொருள்படுதலின் முன்னிலையெதிர்மறைவினை முற்று. எங்குதி என்பது முன்னிலைவினைமுற்று. வாழி என்பது வியங்கோள்.

இப்பாட்டோடு, "பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல், றாவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற, நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக், காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ" என்னும் கலித்தொகைப்பாட்டின் அடிகளும் (129: 8–11), "தன்போல் சினத்துரும் ஏந்திய கோன்கன்னித் தாழ்

துறைவாய்ப், பொன்போல் மலர்ப்புன்னைக் கானலும் நோக்கிப் புலம்புகொண்ட, என்போல் இரவினெல்லாம் துயிலாய் நீ நெஞ்சுருகுதியால், அன்போடொருவற் கறிவிழந்தாயோ அலைகடலே" (234), "பொன்றுன் பயப்பித்து நன்னிறம்கொண்டு புணர்ந்தகன்று, சென்றுருளரோ நினக்குச்சொல் லாய்செந் நிலத்தைவெம்போர், வென்றுன் வியனில வேந்தன் விசாரிதன் வெல்கழல்சேர்ந், தொன்றுர் முனைபோல் கலங்கித்துஞ் சாயால் ஒலிகடலே" (235), "பறைவா யொலியோதம் பந்தர் உகளுந், துறைசேர் சிறுகுடியார் துஞ்சினும் துஞ்சாய், நிறையில் மருள்மாலை எம்போல நீத்த, துறைவன் உடையையோ நீ வாழி வீராய்", "என்போல் இரவினெல்லாம் துயிலாய், நீயும் நின்காதலர்மாட்டு என்போல் அறிவிழந்தாயோ" என்னும்; என்றது தலைமகன் கேட்பின், வரைவானும்; தோழி கேட்பின், வரைவு கடாவுவாளாம்; யாரும் கேட்பாரில்லையாயின், தானே சொல்லி ஆற்றுவாளாம் என்னும் மேற்கோள்செய்யுள்களுடன்கூடிய இறையனாரகப் பொருளுரைப்பகுதியும் ஒத்திட்டுக்காணத்தக்கன. (௩)

(அ௨௪) கடலு மலையும் விசும்புந்
துழா வெம்போற்
சுடர்கொ ளிராப்பகற் றுஞ்சாயாற்
றண்வாடா
யடல்கொள் படையாழி யம்மானைக்
காண்பானீ
யுடலநோ யுற்றாயோ வூழிதோ
றூழியே.

என்பது பாட்டு. (௱௰௪)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், காற்றென்று ஒரு நிறைபொருளாய், அது தான் விரும்பியேற்றுக்கொண்ட பிரிவுத்துயராலே இருந்தவிடத்திலிருக்கமாட்டாதே, மட

னாருவாரைப்போலே உடம்பிலே புழுதியை யேறிட்டுக் கொண்டு வடிவு தெரியாதபடியாய், உள்ளில் வெதுப்பும் புறம்பில் குளிர்ச்சியுமுடைய வஞ்சரைப்போலே குளிர்ந் திருந்தது, அத்தைப்பார்த்து, "நீயும் நான் பட்டத் பட்டாயாகாதே" என்கிருள் ஆமாறு உணர்த்துதல். நுதலிற்று.

தண்மை வாடாய் எம்போல் கடல்உம் மலைஉம் விசும்புஉம் துழாய் சுடர்கொள் இரவு பகல் துஞ்சாய் ஆல் அடல்கொள் படை ஆழி அம்மானை காண்பான் நீ ஊழிதோறு ஊழிஎ உடலம் நோய் உற்ருய் ஒ என்று கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

(இதன் பொருள்) தண்வாடாய்=குளிர்ந்த வாடாய். உள்ளில் வெதுப்பும் புறம்பில் குளிர்ச்சியுமுடைய வஞ் சரைப்போலே சென்றற்ருயாகாதே. எம்போல்=என் னைப்போலே. கடலும் மலையும் விசும்பும் துழாய்-'காரார் திருமேனி காணுமளவும் போய்" (சிறியதிருமடல்) என்று பாற்கடலோடு திருமலையோடு திருநாட்டோடு வாசியறத் தேடுவார்க்குப் போலியாயிருக்கிறபடி. ஊராய வெல்லாமொழியாமே தேடுவார்க்குப் போலியாயிருக்கிற படி. "தௌவநாநிகிரீம்ஸ்சைவஸரிதஸ்சஸராம்ஸிச நிகிலேநவிசிந்வாநௌஸீதாம்தசரதாத்மஜௌ" (வான் மீகிராமாயணம்—ஆரண்யகாண்டம்) என்று தேடித்திரிந் தவர்களுக்குப் போலியாயிராநின்றது."சீதாம்"—"தேடிக் கண்டிலோம்" என்று ஆறியிருக்கலாம் பொருளன்று. "தசரதாத்மஜௌ"—தேடப்பிறந்தவர்களல்லர்; அவர்கள் வாழ்தல் என்று ஒரு பொருளுண்டோ? இத்தால், சென்று அற்றதென்றபடி. கடலும் மலையும் விசும் பும் = அளவிறந்த கடல், அளக்கலாகா அளவும் பொருளும் துளக்கலாகா நிலையுந் தோற்றமும் வறப்பினும் வளந்தரும் வண்மையும் உடைய மலை, அவகாசப்ரதாநம் பண்ணுகிற ஆகாசம், அன்றியே அச்சமான ஆகாசம்.

சுடர்கொள் இராப்பகல் துஞ்சாயால் = சுடரென்று ஞாயிறு. சுடரைக்கொள்ளப்பட்டதென்றது ஞாயிறு மறைந்த இரவோடு, சுடரையுடைத்தான பகலோடு வாசியற உறங்குகிறிலை. அடல்கொள் படையாழி அம்மானைக் காண்பான் = அடலென்று மிடுக்கு. எதிரிகள் மிடுக்கைக் கொள்ளுகை யென்னுதல், தான் மிடுக்கை யுடைத்தாயிருக்கு மென்னுதல். "ஏதத்வ்ரதம்மம" என்ற வளவன்றிக்கே, சேர்ந்தார் பொருட்டாக ஆணைமறுத்த வனானவனோரத்தளவும் அகப்பட்டாயாகாதே. பாரதப் போரிலே ஆழியெடுத்த அன்று அருச்சுனன் இளைத்துக் கைவாங்கினவாறே, பண்ணின ஆணையை அழித்துத் திருவாழியைக்கொண்டு விடுமனைத் தொடர்ந்தானிறே. கெட்டோடுகிறவன் பிற்காலித்துநின்று "எங்களம்மைநாயனார் மாறிமாறியிடுகிற அடியிருக்கிற அழகென்; ஆணைமறுத்தால் சேதமென்? சிறிச்சிவந்த கண்ணழகைக் காணப்பெற்ருல்; "ஆயுதமெடேன்" என்ற நீர் ஆயுதமெடுத்தாலும் அடியேன் கையில் ஆயுதமிருக்கில் தோலேன்; ஆயுதத்தைப் போகடச்சொல்லித் தலையறுத்தருளீர். உமக்கும் வீரத்துக்கும் தோலேன்; முதன்மைக்குத் தோற்பன்" (வியாசபாரதம்—வீட்டுமபருவம்) என்றான். அடல்கொள் படையாழி = மிடுக்கையுடைத்தான படையாகிற திருவாழி. ஆழியம்மானை = கையிலே திருவாழியை யுடைய எம்பெருமானையாகாதே நீயும் காண ஆசைப்பட்டது? நீ = கைம்மாறுவேண்டாது உதவும் நீ. ஊழிதோறாழியே = ஊழிதோறும் ஊழிதோறும். நோவுபடாநிற்கச்செய்தே தவிராதபடி சரீராந்தமான நோவுகொண்டாயாகாதே. காலம்மாறிவரச்செய்தேயும் நோவுமாருதே ஏகரூபமாய்ச் செல்லுகிறபடி. உடலம் நோய் உற்ருயோ = சர்வரட்சகமான உடம்பிலே நோவுவரும்படி பட்டாயாகாதே என்கிருள். உளர்தல் இதுக்கு இயற்கைத்தன்மையிறே (என்றவாறு).

சென்றற்றாயாகாதே=முடியுமளவாணயன்றே. கொள்கை=உடைத்தாகை கெட்டோடுகிறவன்=வீடுமன். அம்மைநாயனார்=தாயும் தமப்பனுமானவர்.

துழாய் என்பது வினையெச்சம். வாடாய் என்பது வாடை என்பதன் விளிவேற்றுமை; என்னை "அவைதாம், இ உ ஐ ஓ என்னு மிறுதி, ய்ப்பா ஞன்கே யுயர்திணை மருங்கின், மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே", "அவற்றுள், இ ஈ யாகும் ஐ ஆயாகும்" (தொல்காப்பியம் —சூத்திரம்—604, 605) என்றார் தொல்காப்பியர் ஆகலின்; "உயர்திணை மருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய" —எனவே மற்றைத்திணைக்கண்ணும் உள, சிறுபான்மை எனக்கொள்க, அவை வருமாறு: "குறையறப்பூத்த கொடிமுல்லாய்" என்புழி, முல்லை—முல்லாய் எனவும், "செங்கால் நாராய்" என்புழி, செங்கால் நாரை செங்கால் நாராய் எனவும் வரும். பிறவும் அன்ன." (தொல்காப்பியம் — சூத்திரம்...604—இளம்பூரணம்) என்றார் இளம்பூரணர் ஆகலின். "ஐயிறு பொதுப் பெயர்க்காயு மாவும், உருபா மல்லவற்றாயுமாகும்" (நன்னூல்-சூத்திரம்—306) என்றார் பவணந்திமுனிவர் ஆகலின்; "உயர்திணையஃறிணைப்பெயர்க்கு அவ்வுருபுகளன்றி ஐகாரம் ஆயெனத்திரிதலும் உருபாம்", வரலாறு: "சிறுமீன் கவுட்கொண்ட செந்தாவி நாராய்", "கொன்றாய் குருந்தே கொடிமுல்லாய்" (நன்னூல் விருத்தியுரை—சூத்திரம்....306) என்றார் சிவஞானமுனிவர் ஆகலின். காண்பான் என்பது வினையெச்சம். (௪)

(அ௨௫) ஊழிதோ றாழி யுலகுக்கு
நீர்கொண்டு
தோழியரு மியாமும்போ னீராய்
நெகிழ்கின்ற

வாழிய வானமே நீயு மதுசூதன்
பாழிமையிற் பட்டவன்கட் பாசத்தா
னைவாயே:

என்பது பாட்டு. (௱௰௫)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின்,

அவ்வளவிலே ஒரு மேகமானது கரைந்து நீராய் விழப் புக்கது; “நீயும் அவனுடைய வீரகுணத்திலே அகப்பட்டாயாகாதே?” என்கிறாள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

ஊழிதோறு ஊழி உலகுக்கு நீர்கொண்டு நீராய் நெகிழ்கின்ற வானமே நீயும் தோழியரும் யாமும்போல் மதுசூதன் பாழிமையில் பட்டு அவன்கண் பாசத்தால் நைவாய் ஏ வாழிய என்று கொண்டுகூட்டுப்பொருள் கோள்.

(இதன்பொருள்) ஊழிதோறூழி = ஊழிதோறும் ஊழிதோறும். உலகுக்கு நீர்கொண்டு = உலகமடங்க வெள்ளமிடவேண்டும்படி நீரை முகந்துகொண்டு. உனக்கு நல்ல நிதர்சநமுண்டு. நீராய் நெகிழ்கின்ற = நீராய் நெகிழ்கின்ற. கரைந்து நீராய் விழுகிற. வானமே மேகத்தைச் சொல்லுதல், ஆகாசத்தைச்சொல்லுதல். மிக நுண்ணிதான ஆகாசம் நீரை முகந்துகொண்டு சிதறிஉருகி நீராய் விழுகிறதென்று நினைக்கிறாள். வானமென்று மேகத்துக்குப்பேர்; “வான் கலந்த வண்ணன்” (அன்பேதகழி 75) என்றதிறே; “வானம் வழங்காதெனின்” (திருக்குறள்-19) என்றானிறே தமிழனும். நீயும்=உலகுக்கு உதவும்பொருட்டாக வடிவுபடைத்த நீயும். தோழியரும் யாமும் போல் = என் இழவுக்கு எம்மின்முன் அவனுக்கு மாயுந் தோழிமாரையும் என்னையும்போலே. மதுசூதன் பாழிமையில் பட்டு=இகழுநரடுநனானவனுடைய வீரகுணத்திலே அகப்பட்டு, அவன்பக்கலுண்டான நசையாலே வாழ

வும்மாட்டாதே முடியவும்மாட்டாதே நோவுபடுகிறாயா காதே. பாழிமை=பலம்; இடமுடைமை யென்றுமாம். அவன்கண் பாசத்தால்=அவன்பக்கல் நசையாலே. பொருளுக்கேற்பவிறே நசை இருப்பது; எவ்வளவு நசையுண்டு, அவ்வளவும் நைவு உண்டாமிறே பிரிநிலையில். நைவாயே=நைவே பலம். வாழிய=உலகுக்கு உதவும் பொருட்டாயிருக்கிற நீ உன்னுடைய கண்ணீர் நீங்கி வாழ்ந்திடுக (என்றவாறு).

பலம்=உடல்வலிமை.

அவன்கண் என்புழி கண் என்பது ஏழாம்வேற்றுமையுருபு. நைவாய் என்பது முன்னிலைவினைமுற்று. நைவாயே என்பதில் ஏகாரம் வினாவின்கண் வந்தது. (ரு)

(அஉசு) நைவாய வெம்மேபோ லொண்மதியே நீயிந்நாண்
மைவா னிருளகற்றாய் மாழாந்து தேம்புதியால்
ஐவா யரவணைமே லாழிப் பெருமானார்
மெய்வா சகங்கேட்டுன் மெய்ந்நீர்மை தோற்றாயே.

என்பது பாட்டு. (௱யசு)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், மேகத்தினருகே பிறையளவான மதி தோற்றியது; அதனைப்பார்த்து, "உன் வடிவில் எழிலிழந்தாயாகாதே" என்கிறாள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

நாள்மதியே நீ இநாள் மை வான் இருள் அகற்றாய் நைவாய எம்மேபோல் மாழாந்து தேம்புதி ஆல் ஐவாய் அரவுஅணைமேல் ஆழி பெருமானார் மெய் வாசகம் கேட்டு உன் மெய் நீர்மை தோற்றாய் ஏ என்று கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

(இதன் பொருள்) நாள் மதியே=நாளால் நிறை வுற்ற மதியே! பண்டு நிறைவாகக் கண்டுவைக்குமே. நாள்மதியே="நாட்பூ" என்னுமர்போலே இளமதி என்றுமர்ம். நீ=காட்சிக்கினிய நீ. இந்நாள்=இக்கா லம். மைவான்இருள் அகற்றாய்=இப்படிக் குறையற் றிருக்கக்கடவ நீ இக்காலத்திலே வந்தவாறே ஆகாசத்தில் கறுத்த இருளைப் போக்கமாட்டுகிறிலை யென்னுதல், கறுத்து வலிதான இருளைப் போக்கமாட்டுகிறிலை யென் னுதல். எதிரி எளியனானால் பகைவர்கள் கூட்டநின்று உறுமுமாபோலே யேசிடாநின்றது. சகாவத்தாநம் உண் டாகாநின்றதீ. நைவாய எம்மேபோல்=நைவையுடைய எங்களைப்போலே யென்னுதல், நைவுதான் ஒரு வடிவு கொண்டாற்போலே யென்னுதல். "பூமியில்நின்றும் தோற் றினபோதுபோலே யிருந்தாள். அத்தையழித்து ஒப்பிக் குமவர் அசந்நிதியாலே ஒப்பனை யழிந்திருந்தாள். பெரு மாள் வந்தாலும் இவ்வாசிரயத்தை யுண்டாக்க வொண் ணாது" என்னும்படி முதலிலே தாமரை குடிபோன பொய் கைபோலே யிருந்தாள். "அவ்யக்தலேகாமிவசந்த்ரலே காம்"—போய்த்தேய்ந்தற்றபடிக்கும் பசப்புக்கும் நிதர் சநமாகச் சொல்லுகிறது. "நற்சரக்குக்குவந்த அழுக்கு என்று தோற்ற இருந்தாள். அம்பு வாயுள்ளே கிடக்கப் புறம்பே ஆற்றினாற்போலே, "அகவாயில் இழவு பெரிது" என்று தோற்ற இருந்தாள். பெருங்காற்றாலே சிதறஅடியுண்ட மேகக்கூட்டம்போலே யிருந்தாள். மாழாந்து தேம்புதியால்=ஒளி மழுங்கிக் குறைந்திராநின் றாய். ஐவாய் அரவணைமேல் ஆழிப்பெருமானார் மெய் வாசகம் கேட்டு = அவருடைய பெரும்பொய்யிலே அகப்பட்டாயாகாதே நீ. "தம் பாம்புபோல் நாவு மிரண்டுளவாயிற்று" (தையொருதிங்கள்—96) என் கிறபடியே, தமக்குப் பொய்சொல்ல ஒரு வாயுண் டாகில், தம் படைக்கு அஞ்சுவாயுண்டு. அவ

னுக்குப் பள்ளித்தோழமை பலித்தபடி. ஆழிப்பெருமானார்=அல்லாத படையோ தான்? நன்றாயிருக்கிறது. தாம் பகலை இரவாக்க நினைக்கில், அதுக்குப் பெருநிலை நிற்கும் படை. பேறு அவர்களாலேயானால், இழவிலும் இன்னாதாக ப்ராப்தி யுண்டென்கை. பெருமானார்=அவர்களுக்கும் தம் பக்கலிலே பொய்யோதவேண்டும்படி பொய்யால்பெரியவர். "பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம்பொதியறை" (பெரியதிருமொழி—964) என்னக் கடவதிறே. "ஆழிப்பெருமானார் மெய்வாசகம்" என்னவே "பொய்" என்று ப்ரசித்தமாயிருக்கும்போலே காணும். பொய்யென்னுதொழிவானென்? என்னில், "பொய்" என்னில், நாட்டார் பொய்யோபாதியாமே. அவர் "ஏதத்வ்ரதம்மம" (வான்மீகிராமாயணம் யுத்த காண்டம்) என்ற வார்த்தைகேட்டே நீயும் இப்படி அகப்பட்டது. இப்போது உதவாமையாலே "பொய்" என்றிருக்கிறாளிறே. இராமன்பிறப்பில் மெய்யும் கண்ணன் பிறப்பில் பொய்யுமிறே சேர்ந்தார்க்குத் தஞ்சம். உன் மெய்ந்நீர்மை தோற்றாயே=உன் வடிவில் எழில் இழந்தாயாகாதே; காட்சிக்கினிய தண்ணளியேயாய் உலகுக்கு உதவும்பொருட்டான உன்னுடம்பினொளியையாகாதே இழந்தது (என்றவாறு).

"நைவு" என்றது "நை" என்று கடைக்குறைத்தலாய், "வாய்" என்று இடமாய், நைவுக்கிடமாய்; அதாவது நைவையுடைத்தான என்றபடி. அன்றியே, "நைவு ஆய" என்று சொற்பிரித்து, ஆய=உண்டான; நைவு தான் ஒரு வடிவுகொண்டிருக்கிற என்னுதல். "போய்த் தேய்ந்தற்ற" என்றது மிகவும் தேய்ந்தற்ற என்றபடி. மாழாந்து=மழுங்கி. தேம்புதி=தேயாநின்றாய். வான்=ஆகாசமும், வலிமையும். பள்ளி=படுக்கையும், பள்ளிக்கூடமும். பெருநிலைநிற்கையாவது களவுக்குத் துணை

யாகப் புறம்பே ஆட்பார்த்துக் காத்துநிற்கை. இன்னு தாக=வெறுக்க. நீர்மை தோற்கையாவது அழகழிகை.

அகற்றுய் என்பது எதிர்மறைமுன்னிலை வினைமுற்று. தேம்புதி என்பது முன்னிலைவினைமுற்று. ஆல் என்பது ஆதலால் எனக் காரணப்பொருள்படும் ஓர் இடைச்சொல். (சு)

(அஉஎ) தோற்ருே மடநெஞ்ச மெம்பெருமா
ஞரணற்கெம்
மாற்ருமை சொல்லி யழுவோமை
நீநடுவே
வேற்ருேர் வகையிற் கொடிதா
யெனையூழி
மாற்ருண்மை நிற்றியோ வாழி
கனையிருளே.

என்பது பாட்டு. (௱௰எ)

இப்பாட்டு என்னுதலிற்ருே எனின், மதி கெட்ட வாறே இருள் வந்து மேலிட்டது என்கிருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. தோற்ருேம் என்று தொடங்கிக் கீழும் மேலும் போருகிறபடியொழியச், சொல்நயத்தைப்பற்ற எம்பெருமானுர் அருளிச்செய்துபோருவதொன்று உண்டு; அம்மங்கியம்மாளும் அத்தையே வற்புறுத்திப்போரும். அதாகிறது, தான், பிரிவாற்ருதார் அநேகர் கூடக்கட்டிக்கொண்டு கூப்பிடாநிற்க, இருள் வந்து முகத்தை மறைக்க, அத்தைப் பார்த்து, " ஆற்ருமைக்குப் போக்குவிட்டுப் பொறுக்கவொட்டாதே நீ வந்து நலியக்கடவையோ" என்கிருள் என்பது.

கனை இருளே எம்பெருமான் நாரணற்கு மடம் நெஞ்சம் தோற்ருேம். எம் ஆற்ருமை சொல்லி அழுவோமை

நீ நடுவே வேற்றோர் வகையின் கொடிதாய் எனை ஊழி மாற்றாண்மை நிற்றியோ வாழி. என்று கொண்டுகூட்டிப் பொருள்கோள்.

(இதன் பொருள்) "எம்மேபோல்" என்கிற பொருள்களையெல்லாம் கூட்டிக்கொண்டு சொல்லுகிறது. கனையிருளே=செறிந்த இருளே என்னுதல், கனையிருள்=கனைத்துக்கொண்டு செருக்கிவருகிறஇருளே யென்னுதல். அன்றியே, ப்ரகரணத்தோடே சேர்ந்த பொருளாவது—இருள் என்று ஒரு பொருளாய், "அதுதான் ஒளி மழுங்கி அடங்கியிருக்கை இயல்பு" என்று அறியாதே, விரும்பியது பெருமையாலே ஒளி மழுங்கி வாய்விட்டுக் கூப்பிடவும் மாட்டாதே நோவுபடுகிறபடியைக் கண்டு, "உன் இழவு கனத்திருந்ததீ!" என்கிறாள். வகுத்ததுறையிலே நாமெல்லாம் நெஞ்சிழந்து கூப்பிடாநிற்க, நீ உன் ஆற்றாமையைக் காட்டி நலியாநின்றாய்; உன் ஆற்றாமை நீங்கி நீ வாழ்ந்திடுக என்கிறாள். எம்பெருமான் நாரணற்கு=கெடுவாய், வகுத்த துறையிலே யன்றோ நாங்கள் நெஞ்சிழந்தது? "தன்னுடைமை" என்றால் வத்சலனாயிருக்குமவனுக்கன்றோ இழந்தது; சுலபனுக்கு என்றுமாம். மடநெஞ்சம் தோற்றோம் = பகவத்விடயமென்றால் விடமாட்டாதபடி சபலமான நெஞ்சையிழந்தோம்; அன்றியே, பவ்யமான நெஞ்சை யிழந்தோம் என்னுதல். எம் ஆற்றாமை சொல்லி அழுவோமை=ஆற்றாமையுடையார், தந்தாம் ஆற்றாமை சொல்லிக் கூப்பிடக்கடவதன்றோ. நாங்கள் பெறப்புகுகிறதொரு பயனுண்டாய் "அத்தை விலக்கி நாம் பெறவேண்டும்" என்றுதான் செய்கிறாயன்றே. அவனைப் பெறவோ? போன நெஞ்சைப் பெறவோ?. எங்களாற்றாமையாலே அழப்பெறோமோ? நீ நடுவே=அல்லாதவற்றுக்கு உள்ளது அமையாதோ உனக்கு. அவனையொழிந்த நம்மில் நாம் கழுத்தைக் கட்டிக்கொண்டு கிடந்து கூப்பிடுகையொழிய பாத்யபாத்கபாவ

முண்டோ? நலிகைக்கு ஒரு காரணமின்றிக்கேயிருக்கச் செய்தே. வேற்றோர் வகையின் கொடிதாய்=வேற்றோருண்டு பகைவர்கள்; வகையுண்டு அவர்கள் நலியும் வகை. அதிலுங் கொடிதாக நலியாநின்றாய். பகைவர்களானாலும், நோவுபட்டாரை "ஐயோ" என்னவன்றோ அடுப்பது. எனையூழி மாற்றாண்மை நிற்றியோ=காலதத்வமுள்ளதனையும் பகைமையிலே நிற்கக்கடவையோ? இராவணாதிகள், பிரித்த இத்தனை, கூப்பிடப் பொறுத்தார்கள்; நீர்மையுடையார், கண்ணநீரை விழவிட்டார்கள்; நீர்மையுடையார்படியும் கண்டிலோம், பகைவர்கள்படியும் கண்டிலோம்; உன்னது தனியாயிருந்ததீ. வாழி=கொலைஞரை "உடன்பிறந்தீர்" என்னுமாபோலே (என்றவாறு).

நாரணன் = நாராயணன்; இப்பெயர்க்காரணத்தை, "எண்ணும் (எள்ளும்) எண்ணெயுமியைய மற்றெப்பொருளகத்தும் நண்ணு நாரணன்" (பாகவதம்—பத்தாங்கந்தம்—திருவவதாரவத்தியாயம்—29) என்று செவ்வைச்சூடுவாரும், "நின், தோற்றமு மகலமு நீரினுள" (பரிபாடல்-4-அடி-30) என்பதன்பொருள் "தோற்றம்=வெளிப்படுதல். அகலம்=பெருமை. நாராயணனென்னுந் திருநாமம் நீரின்கட் காணப்படுதலாகிய இக்காரணம்பற்றி வந்தது" என்று பரிமேலழகரும் விளக்கியுள்ளார்கள்.

அழுவோமை என்பது ஐ என்னும் இரண்டாம் வேற்றுமையுருபேற்ற வினையாலணையும்பெயர். வேற்றோர் வகையின் என்புழி இன் என்பது பொரூஉப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமையுருபு; "இதனிற்றீது இது" என்புழிப்போல (தொல்காப்பியம்—சூத்திரம்-560-இளம்பூரணம்). வேற்றோர் வகையில் என்று பிரித்துழி இல் என்பது ஒப்புப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமையுருபு (நன்னூல்—சூத்திரம்—299) எனினும் பொருந்தும். நிற்றி என்பது முன்னிலைவினைமுற்று. (எ)

(அஉஅ) இருளின் றிணிவண்ண மா நீர்க்
கழியேபோய்
மருளுற் றிராப்பகற் றுஞ்சிலு நீ
துஞ்சாயா
லுருளுஞ் சகட முதைத்த பெருமாஞ
ரருளின் பெருநசையா லாழாந்து
நொந்தாயே.

என்பது பாட்டு. (ாயஅ)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், அவ்விருளுக்கு இருய்த்து அங்கே இங்கே திரியாநிற்க, இருள் செறிந்தாற்போலே யிருப்பதொரு கழியிலே சென்று இழிந்தாள்; அது மடலெடுப்பாரைப்போலே கெட்டோடாநிற்குமே; பாவியேன், சகடாசுரனை யழித்த அச்செயலிலே நீயும் அகப்பட்டாயாகாதே யென்கிறாள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இருளின் திணிவண்ணம் மாநீர் கழியே போய் மருள் உற்று இராப்பகல் துஞ்சிலும் நீ துஞ்சாய் ஆல் உருளும் சகடம் உதைத்த பெருமாஞர் அருளின் பெருமை நசையால் ஆழாந்து நொந்தாய் ஏ என்று யாற்றுநீர்ப்பொருள்கோள்.

(இதன்பொருள்) இருளின் திணிவண்ணம் மாநீர்க் கழியே=அச்சமான இருள், வெளிறுன இருளன்றிக்கே, இருளின் புறவிதழை வாங்கி வயிரத்தைச் சேரப்பிடித்தாற்போலே யிராநின்றது. இருளின் திணிபோலே யிருக்கிற நிறத்தையுடைத்தாய்ப் பெருநீரையுமுடைத்தான கழியே! போய் மருளுற்று=மிகவும் அறிவுகெட்டு. மயர்வற மதிநலமருளப்பெற்றூர் அறிவுகேட்டுக்கும் அவ்வருகேயாயிராநின்றதீ! உன் அறிவுகேடு! இராப்

பகல் துஞ்சிலும் நீ துஞ்சாயால்=காலத்துக்கு ஒரெல்லை காணிலும் உன் ஆற்றாமைக்கு ஒரெல்லை காண்கிறிலோம். உருளும் சகடம் உதைத்த பெருமானார்=காவலாகவைத்த சகடந்தானே அசுராவேசத்தாலே ஊர்ந்துவர, தாயுங் கூட உதவாத சமயத்திலே முலைவரவுதாழ்த்துச் சிறி நிமிர்த்த திருவடிகளாலே முடித்து, "உலகத்துக்கு ஆண்டானைத் தந்த உதவுமவன் காதலிக்கு உதவானோ" என்னும் நசையாலே. அருளின் பெருநசையால்=அருளின் கனத்துக்குத் தக்கபடியிறே நசையின்கனம் இருப்பது. ஆழாந்து நொந்தாயே=தரைப்பட்டு நோவுபட்டாயாகாதே (என்றவாறு).

வயிரம்=காழ்.

நொந்தாய் என்பது முன்னிலைவினைமுற்று. நொந்தாயே என்பதில் ஏகாரம் வினாவின்கண் வந்தது. (அ)

(அ௨௯) நொந்தாராக் காதனோய் மெல்லாவி
யுள்ளுலர்த்த
நந்தா விளக்கமே நீயு மளியத்தாய்
செந்தா மரைத்தடங்கட் செங்கனிவா
யெம்பெருமா
னந்தாமத் தண்டுழா யாசையால்
வேவாயே.

என்பது பாட்டு. (௱௰௯)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், அக்கழிக்கு ஒரு கரை காணமாட்டாதே மீண்டுவந்து படுக்கையிலே விழுந்தாள்; அங்கு எரிகிற விளக்கைக் கண்டாள்; அது "உடம்பில் கைவைக்கவொண்ணாதபடி பிரிவுக்காய்ச்சல் பற்றி எரியாநின்றது" என்று அத்தைப் பார்த்து நீயும் நோவு

பட்டாயாகாதே யென்கிருள் ஆமாறு உணர்த்துதல் நுத லிற்று.

நந்தா விளக்கமே நீயும் அளியத்தாய் செம்மை தாமரை தடகண் செம்மை கனிவாய் எம்பெருமான் அம் தாமம் தண்மை துழாய் ஆசையால்நொந்து ஆரா காதல் நோய் மென்மை ஆவி உள் உலர்த்த வேவாய் ஏ என்று கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

(இதன் பொருள்) நந்தா விளக்கமே=சுவாலாபேதானுமானம் இருந்து பார்க்கிருளன்றே. சந்தான விச்சேத மின்றிக்கே உருவநோவுபடுகிருயாகாதே. நீயும் அளியத் தாய்=நாட்டுக்குக் கண்காட்டியான நீ படும்பாடே இது. அளியத்தாய்=அருமந்த நீ பிறர்பொருட்டான உடம் பிலே உனக்கு நோவுவருவதே? செந்தாமரைத் தடங் கண் செங்கனிவாய்= "பதிசம்மாநிதாசீதாபர்த்தாரமஸி தேக்ஷணு" என்ற பேறு பெறவேண்டும்'' என்றத்தையோ நீயும் ஆசைப்பட்டது? செந்தாமரைத் தடங்கண்=முகத் தைப் பார்த்துக் குளிரநோக்கினபோதைத் திருக்கண்க ளில் செவ்வி சொல்லுகிறது. செங்கனிவாய்=இன்சொல் சொல்லுகிறபோதைத் திருவதரத்தில் பழுப்பைச் சொல் லுகிறது. எம்பெருமான் அந்தாமத் தண்டுழாய் ஆசை யால்="நோக்காலும் ச்மிதத்தாலும் என்னை அநந்யார் ஹையாக்கினவனுடைய அழகிய திருத்துழாய் மாலைபெற வேண்டும்'' என்னும் ஆசையாலே. நொந்து ஆரா காதல் நோய் மெல்லாவி உள்ளுலர்த்த= "நோவ" என்று புக் கால், . நொந்து தலைக்கட்டக்கடவதன்றிக்கேயிருக்கிற காதல்நோயானது, தொட்டார்மேலே தோடமாம்படி மென்மையாயிருக்கிற உயிரைக் குருத்துவற்றுக உலர்த்த. மெல்லாவி=பகவானது குணநுகர்ச்சியாலே நைந்திருக் கை. காற்றுப்படப் பொறுதிருக்கை. வேவாயே=உக் கக்காலுக்கு உளையக்கடவ உன்னுடம்பே நெருப்பாக வேகிருயாகாதே (என்றவாறு).

உக்கம்=விசிறி. கால்=காற்று.

ஆரா என்பது ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம். விளக்கம் என்பது அம் சாரியை பெற்றுநின்ற விளக்கு. வேவாயே என்பதில் ஏகாரம் வினுவின்கண் வந்தது. (கூ)

(அ௬௰) வேவாரா வேட்கைநோய் மெல்லாவி
யுள்ளுலர்த்த
வோவாதி ராப்பக லுன்பாலே
வீழ்த்தொழிந்தாய்
மாவாய் பிளந்து மருதிடைபோஈ
மண்ணளந்த
மூவா முதல்வா வினியெம்மைச்
சோரேலே.

என்பது பாட்டு. (௱௨௰)

இப்பாட்டு என்னுதலிற்றோ எனின், இவளாற்றுமை யெல்லாம் தீர வந்து கலந்த எம்பெருமானைக் குறித்து, "இனி ஒருநாளும் என்னை விடாதொழியவேண்டும்" என்கிறுள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

மாவாய் பிளந்து மருது இடைபோய் மண் அளந்த மூவா முதல்வா வேவாரா வேட்கைநோய் மென்மை ஆவி உள் உலர்த்த ஒவாது இராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந்தாய் இனி எம்மை சோரேல் ஏ என்று கொண்டு கூட்டுப்பொருள்கோள்.

(இதன் பொருள்) மாவாய் பிளந்து மருது இடை போய் மண் அளந்த மூவா முதல்வா=கேசிவாயை அநாயாசேந கிழித்து, மருதமரங்களின் நடுவேபோய், மாவலி பறித்துக்கொண்ட நிலத்தை எல்லைநடந்து மீட்டுக் கொண்டு, இப்படி உதவிகளைப் பண்ணிப், பின்னையும் ஒன்